# நம்மை நம்பி வாழும் ஜீவன்கள்!



**கோவை போலீஸ் கமிஷனர் பால கிருஷ்ணன்:** என் வீட்டில் நான்கு நாய், இரு பூனை, ஒரு முயல் குட்டி,கொஞ்சம் பறவைகள் இருக்கின்றன. மகன் அத்ருத், நத்தை வளர்க்கிறான். மனைவி ஷ்வேதா தான், செல்லப்பிராணிகளை முழுமையாக பராமரிக்கிறார்.

வீட்டிலுள்ள நான்கு நாய்களில்,மூன்று தெருவில் இருந்து மீட்கப்பட்டவை. ஒரு கால் இழந்த லேப்ரடார் பப்பி, தெருவில் சுடுதண்ணீர் ஊற்றப்பட்டு பராமரிப்பற்ற ஒரு பப்பி, ஊட்டச்சத்து குறைபாடு கொண்ட ஒரு பப்பியை வளர்க்கிறேன். இவைகள்தற்போது ஆரோக்கியமாக இருக்கின்றன. நம்மை நம்பி வாழும் ஜீவன்களை பராமரிக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. அதை தண்டிக்கவோ கொடுமைப்படுத்தவோ கூடாது.

போலீஸ் ஸ்டேஷன்களில் பதிவாகும் குற்றச்சம்பவங்கள் குறித்து கேட்டறிய, வாரந்தோறும் கூட்டம் நடத்தப்படும். அப்போது முதலில் கேட்பது, விலங்குவதை சார்ந்த புகார்கள் ஏதேனும் பதிவாகியிருக்கிறதா... அப்படி இருந்தால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியதாகவே இருக்கும். விலங்குவதை சார்ந்த குற்றச்சம்பவங்கள் நிகழ்ந்தால் போலீஸ் ஸ்டேஷன், மாநகராட்சி, மாவட்ட நிர்வாகத்திலோ அல்லது தன்னார்வ அமைப்புகளுக்கோ, தகவல் தெரிவிப்பது அவசியம். விலங்குகளுக்கு எதிராக நடக்கும் குற்றச்சம்பவங்களை பார்த்து, கண்டும் காணாமல் கடந்து போவது, மனிதத்தன்மையற்ற செயல்.